**<u>சுருக்கம்</u>**

தமிழ் வளர்ச்சி – சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் – 2006ஆம் ஆண்டு வெளி வந்த சிறந்த நூல்கள் மற்றும் அதனை பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பரிசு வழங்குதல் – கூடுதல் செலவினம் – ஒப்பளித்தல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (மற்றும்) செய்தித்துறை

அரசாணை (ப) எண்.30

நாள் 17.1.2008
சர்வஜித், தை 3
திருவள்ளுவராண்டு 2039

படிக்கப்பட்டது :-

1. அரசாணை (பல்வகை) எண்.426 த.வ., அ.நி. (ம) செ. துறை நாள் 28.12.2007
2. அரசாணை (நிலை) எண். 20 த.வ., அ.நி. (ம) செ. துறை நாள் 17.01.2008
3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நே.மு.க.எண்.ஆ.மொ2/6047/2007 நாள் 17.1.2008

.........

<u>ஆணை</u> :-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழில் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் 2006ஆம் ஆண்டு பரிசு பெற தெரிவு செய்யப்பட்ட 29 வகைப்பாடுகளுக்குரிய சிறந்த நூல்களுக்கும் நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை வழங்கும் பொருட்டும் பரிசு பெறும் நூலாசிரியர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் சான்றிதழ் வழங்குதல் பயணப்படி இன்னபிற செலவினங்களுக்கு ரூ.3,60,000/– மட்டும் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பரிசுத் தொகை நூலாசிரியர்களுக்கு ரூ.20,000/– எனவும், பதிப்பகத்தாருக்கு ரூ.5,000/– எனவும் உயர்வு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. இதனடிப்படையில் 2006ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தாருக்கு பரிசு வழங்குவதற்காக ரூ.3,77,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரம் மட்டும்) (நூலாசிரியர்களுக்கு பரிசுத் தொகை வகையில் கூடுதல் செலவினம் ரூ.2,90,000/–, பதிப்பகத்தாருக்கு பரிசுத் தொகை வகையில் கூடுதல் செலவினம் ரூ.87,000/– மட்டும்) முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கு மேல் கூடுதல் செலவினமாக அரசு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. இக்கூடுதல் செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் :-
“2202 பொதுக் கல்வி – 05 மொழி வளர்ச்சி – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது. AA– தமிழ் வளர்ச்சி இயக்ககம் .09 உதவி மானியங்கள் 03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (து.தொ.கு.எண். 2202 05 001 AA 0934”.)

5. 2007–2008 திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த மதிப்பீட்டில் இச்செலவினத்திற்கு கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படும்.

6. கூடுதல் நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு தொகுதி 1ன் பிரிவுக்கூறு 99ன்கீழ் மேற்கொள்ள தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. இப்பட்டியல் இயக்குநரால் சமர்ப்பிக்கும்போது அனுமதித்து இதர இனங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் பணம் வழங்க சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. நிதியொதுக்கம் போக எஞ்சியுள்ள தொகையினை 2007–2008 திருத்திய/இறுதித் திருத்த மதிப்பீட்டில் வழங்கக் கோரி உரிய கருத்துரு அனுப்ப தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.185/FS(p)/2008 நாள் 17.1.2008 ஒத்திசைவுடன் கூடுதல் பேரேடு எண்.1679(ஆயிரத்து அறுநூற்றி எழுபத்தி ஒன்பது)– ன்படி மற்றும் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ.சந்தானம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ் வளர்ச்சி வளாகம், சென்னை – 8

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 79
(தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9 / 18 / 35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை –1

நகல் :-
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9
நிதி (த.வ.அ.நி (ம) செ.) (வ.செ.பொ.II) துறை, சென்னை–9
இ.கோ./உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /